உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-ருக.] மன்மத-௵—புரட்டாசி-௴ [பகுதி- கக.

Vol. 51. September-October—1955. No. 11.

உள்ளுறை

நக்கீரர்: 321

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

பழந்தமிழ்ப் புலவரும் கடவுள் வாழ்த்தும்: 327

M. பொன்னையா

சோநாட்டின் தொன்மை: 332

ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

புள்ளினத்தின் புனிதத்தொண்டு: 345

சாமுவேல் ஆபிரகாம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பொதுஅங்கத்தினர் மகாசபைச் கூட்டம். 352

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955.

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனர், மதுரை

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-௫௧.] மன்மத-௵-புரட்டாசி-௴ [பகுதி-௧௧.

Vol. 51. September-October—1955. No. 11.

## நக்கீரர்

—o—

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனர் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

திரிபுர மெரித்த விரிசடைப் பெம்மானது மணவினை இமயத்தில் நிகழ்ந்த காலத்து, வடதிசை தாழ்ந்து, தென்திசை உயர்ந்தபோது அதனைச் சமநிலைப்படுத்தும் காரணமாகப் பிறையணிப் பெம்மான் அகத்தியரை ஏகுமாறு கூற, ஆசிரியர் மனமாழ்கினர். அவ்வெல்லை, அரன் ஆசிரியரை நோக்கி,

"அவலித்தல் வேண்டா நேட்டி அருந்தவக் கிழவ! ஞாலம்
செவிலித்தா யென்ன ஓம்பும் நீப்புனற் கன்னி நாட்டில்
தவலிற்றீர் வேறு காஞ்சி சமைத்தும்உன் பொருட்டு மாதோ"

—காஞ்சிப்புராணம்.

நீ தென்றிசைக்குப் போவதை எண்ணி வருந்தற்க. நின் பொருட்டு வேறு காஞ்சியைக் கன்னி நாட்டில் படைப்போம். அங்கு பங்குனி மாதத்தில் ஒவ்வோராண்டும் எமது மணவினையைக் கண்டு களிக்கலாம். ஆதலின் இக் கணமே நீ தென்றிசையடைக, எனப் பெம்மான் பகர்ந்ததும் ஆசிரியர் தென்றிசைப் போந்தார்.

அக் காலத்தில் தமிழகம் சிறிய நாகரிகம் பெற்றிருந்தது. படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வந்த பழங்குடி மரபினரான

சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடைத் தமிழ்வேந்தர் மூவரும் தமிழகத்தை ஆண்டுவந்தார்கள். அவர்களில் பாண்டி மன்னர் தமிழபிமானம் மிகநிறைந்தவர். அவர்களில் ஒருவனுன "காய்சின வழுதி" என்போன் ஆசிரியர் அகத்தியனுரை படைத்து அவருதவியால் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவினன். பீடுமிக்க மாடமதுரையில் முதற்சங்கம் கூடியது. அதுகாலே, அகத்தியனுரும், இறையனுரும், குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என்றிவர் உள்ளிட்ட புலவர் பெருமக்கள் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் இன்னும் பிறவும் ஆராய்ந்தனர். ஆசிரியர் 'அகத்தியம்' என்னும் இலக்கணநூலேயியற்றினர். இச்சங்கம் பல்லாண்டுகள் இருந்தது. அதுகாறும் 'காய்சினவழுதி' முதல் கடுங்கோன்ஈருக எண்பத்தொன்பது பாண்டிய மன்னர் தோன்றி மறைந்தனர். இதனைச் சிலப்பதிகாரம் வேனிற் காதையுரையில் பரக்கக் காணலாம்.

பின்னர்த் தென்மதுரையைக் கடல்கொள்ள, சங்க நூல்களும் அழிந்துபட்டன. பின்னர், 'வெண்டேர்ச்செழியன்' என்னும் மீனக்கொடியோன் இரண்டாம் முறை சங்கம் ஏற்படுத்தினன். அதுகாலே ஆசிரியர் தொல்காப்பியனுர் தாமியற்றிய 'தொல்காப்பியம்' என்னும் புதைபொருள் அமைந்த இலக்கணநூலேப் பாண்டியன் சபமாகீர்த்தி முன்னிலேயில் அரங்கேற்றினர். இச் சங்கம் கபாடபுரத்தில் நிகழ்ந்தது. பலவருடங்கள் நிலேபெற்றிருந்தபின்னர் இச்சங்கமும் அழிந்துபட்டது.

மூன்ருவதாகக் கடைச்சங்கம் ஒன்று மதுரையிற் கூடியது. நாம் எடுத்துக் கையாளப்புகும் செய்தி இச் சங்கத்தைப் பற்றியதேயாம். இதனில் சோமசுந்தரக் கடவுளேயும் சேர்த்து நாற்பத்தொன்பது புலவர் இருந்தனர். அவர்களில் தலேமை பெற்றவர் நக்கீரர். இவரது வரலாற்றை இனி ஆராய்தும்.

நல்லிசைப் புலவரேருய நக்கீரர் மதுரையம்பதியில் உறைந்த கணக்காயரின் செல்வப் புதல்வராவர். இவரது தந்தையாரும் பன்னூல் படித்த புலவர். நக்கீரரது இயற்பெயர் 'கீரன்' என்பது

இவர் கல்விகேள்விகளிற் சிறந்தவராயிருந்தமைபற்றி 'ந' கர இடைச் சொல்லும் 'ஆர்' விகுதியும் தந்து 'நக்கீரனார்' எனப் புலவர் இவரை அழைப்பாராயினர். இவர் இன்ன குலத்தைச் சேர்ந்தவர் என்பதை இதுகாறும் ஒருவரும் கண்டிலர்; கண்டறியவும் ஏதுவில்லை. இவர் பாடிய நூல்களால் இவர் சைவசமயத்தினர் என்பதுமட்டும் உண்மை. எனினும், இவர் எச்சமயத்தையும் எச்சமயத்தாரிடமும் இகழ்ந்தாரில்லை. இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்னலாம். இவரது பெருமை இனிவருஞ் செய்திகளில் இருந்து இனிதுபுலனாகும்.

பாண்டியநாடு பன்னிருயாண்டு வற்கடஞ்சென்றது. பன்னீராண்டும் கழிந்த பின்னர் நன்மழை பெய்ய நாடு செழித்தது. அரசன் 'நூல் வல்லாரைக் கொணர்க' என, ஏவலர், 'வேந்தே! எழுத்து, சொல், யாப்பு ஆகிய இவற்றில் வல்லுநரைக் காண்கிலோம்' என்றனர். எனலும், அரசன் மனங்கவன்றான். இதனை யுணர்ந்த ஆலவாய் அடிகள் மனமிரங்கி பொருளுக்குரிய 60 சூத்திரங்களை மூன்று செப்பேடுகளில் எழுதிப் பீடத்தின் கீழிட்டான். மறுநாள் கோயில் ஸ்தானிகன் அவ் வேடுகளை அரசனிடம் சேர்ப்பித்தான். அரசன் இறைவன் தண்ணளித்திறனை நினைந்துருகி, சங்கப் புலவரைப் பொருள் கூறுமாறு வேண்டினன். யாவரும் பொருள் அறியாது மயக்க முடிவில் நக்கீரரே அதற்கு உரை கண்டோதினர்.

இத்தகைப் பெருமை வாய்ந்த நக்கீரர் வாய்மை, நடுநிலை, அஞ்சாமை முதலிய சிறந்த குணங்கள் சிறக்கப் பெற்றிருந்தார். அக் காலத்தில் 'பாண்டியன்—வங்கிய சூடாமணி' என்பவன் பாண்டிய நாட்டை அரசாண்டு வந்தான். அவன் ஓர் மாலையம்பொழுது தன் மாதேவியுடன் இளமரக்காவில் இனிது வீற்றிருந்தான். அவ் வமயம் அங்கு வியக்கத்தக்க நறுமணம் வீசியது. அம் மணம் தன் மனைவியின் கற்றைவார் குழலில் இருந்தே வெளிப்போந்ததாகக் கண்டனன் காவலன். இம் மணம் இவள் கூந்தற்கு இயற்கையில் உளதோ? அன்றி செயற்கையில் உளதோ என ஐயுற்று, என் உள்ளத்து ஐயத்தைப் போக்க வல்லார் இதனைப்பெறுக என்று ஆயிரம்பொன் அடங்கிய கிழி யொன்றினைச் சங்க மண்டபத்தின் முன் தூக்குவித்தான். இது நிற்க.

நாடோறும் சோமசுந்தரக் கடவுளை வழிபடுவான் அந்தணன் 'தருமி' என்பான் அரசன் தூக்கிய பொற்கிழியைப் பெறுவான் வேண்டி இறைவனை யண்மி, கூடல் பெருமானே! அடியேன் தந்தை தாயாரை யிழந்து தவிக்கும் அகதி, அடியேன் நற்குணம் நிறைந்த நங்கை ஒருத்தியை நாடி மணம் புரிந்துகொள்ள விரும்புகின்றேன். அதற்கு வேண்டிய பொருள் இன்றி வாடுகின்றேன். பெரும! இது போழ்து அரசன் தன் மனத்தில் தோன்றியுள்ள ஐயத்தைப் போக்கு வோர்க்குப் பொற்கிழி தருவதாக வாக்களித்துள்ளான். அவனது ஐயத்தைப் போக்கும் செய்யுள் ஒன்றைத் தருக, என்று குறை இரந் தான். இறைவன் தன் அடியனின் துயரை நீக்க விரும்பி,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே"—குறுந்தொகை.

என்னுஞ் செய்யுளை இயற்றித் தந்தனர்.

தருமியும் அது பெற்று வந்து சங்கப் புலவர்க்குக் காட்டினன். புலவர் அரசனுக்குக் காட்டிப் பொருள் விளக்கினர். கூந்தற்கு இயற் கையில் மணம் உண்டு என்பதே அச் செய்யுளின் கருத்து. இது அரசன் கருத்துக்கு ஒத்திருந்தமையின் 'தருமி பொற்கிழி பெறுக' என்றான். எனலும், தருமி சென்று கிழியறுக்கும் சமயம் அவ் வழிப்போந்த நக்கீரனார் கண்டு அவனைத்தடுத்து, அவன்கொணர்ந்த செய்யுள் 'பொருட் குற்றமுடைத்து' எனக் கூறிவிட்டனர்.

அதுகேட்ட அந்தணன் பெருந்துயரெய்தி இறைவன் திருமுன் அடைந்து 'கண்ணுதலே! நினது செய்யுள் குற்றமுடையதெனச் சின்னாள் வாழ்வுடைய நக்கீரன் கூறிவிட்டான். பெரும! எங்கும் விளங்கும் எழில் பெறும் இறைவனுகிய நீ இயற்றிய செய்யுட்கு மகிமைதான் யாது? உனது ஆற்றலைச் சங்கத்தார் முன்னிலையில் நிலை நாட்டினுலன்றி உன்னை ஒருவரும் மதியார் என்பது திண்ணம் எனக் கூறிப் போந்தான்.

அந்தணன் அகல, அருட்பெருங் கடவுள் புலவர் வேடத்துடன் சங்கமண்டப மடைந்தான். அடைந்து, ஆண்டு வீற்றிருந்த புலவர் களை நோக்கி, 'எமது கவிக்குக் குற்றங் கூறியவர் யாவர்?' என, நக்கீரர் 'நானே' என்றனர். 'யாது காரணமாகக் குற்றங் கூறினீர்' என அண்ணல் வினவ, நக்கீரர் 'கூந்தற்கு இயற்கையில் மணமில்லை மணமுண்டு என்று சொன்ன உமதுகவி பொருட்குற்றம் உடைத்து என்றோம்' அவ்வளவில் மதுரேசன் மாபெரும் புலவரை நோக்கிப் புன் னகை புரிந்து 'நீர் வழிபடும் உமையாள் கூந்தற்கும் இயற்கையில் மணமில்லையோ' என அதற்கு நக்கீரர் 'இல்லை' என விடையிறுத்தார். அதுகேட்ட சுந்தரன் முனிவுகொண்டு, தனது எரிவிழியைச் சிறிதே காட்டினன். வந்தவன் கண்ணுதற் கடவுள் என்பதை அறிந்தும், அஞ்சா நெஞ்சம் படைத்த நக்கீரர், 'உமது உடம்பெல்லாம் நெருப் புக் கண்களாயினும் உமது கவி குற்றமுடைத்தே' என உறுதியாய் மொழிந்தார். இறைவன் எல்லையிலாச் சீற்றங்கொண்டு 'உமையாளை இழித்துரைத்த நீ இம்மையிற் குட்டநோயுற்றலைக' எனச்சபித்தார்.

சபிக்கவும் புலவர் பெருமான் நடுக்க மெய்தி, பெம்மான் கழலடி களில் வீழ்ந்து இறைஞ்சித் தமது பிழையை மன்னிக்குமாறு மன் றாடினர். அருளே வடிவாய அண்ணல் 'அன்ப! கைலை காண நின் னோய் நீக்கும்' எனக் கூறி மறைந்தார். புலவர் கைலைசெல்ல உறுதி கொண்டு சங்கப் புலவரிடமும் அரசரிடமும் பிரியா விடைபெற்று விழிநீர் வார மதுரையினின்றும் புறப்பட்டார். அங்ஙனம் புறப் பட்டவர்,

> "என்றினி மதுரை காண்போம் எப்பகல் சவுந்த ரேசன்
> தன்றிரு வடிகள் காண்போம்; தாயை யெஞ்ஞான்று காண்டோம்;
> வென்றிவேல் தரும வேந்தர் வேந்தனை எந்நாட் காண்போம
> ஒன்றுயிர்த் துணையாம் சங்கத் துறைவயைப் பொழுது காண்போம்"
>
> —சீகாளத்திப் புராணம்.

என்று வருந்தி அகன்றார்.

அகன்ற புலவர் வழியில் பற்பல தலங்களைத் தரிசித்து முடிவில் இமயமலைச் சாரலையடைந்து அங்கு ஓர் ஆலவிருக்கத்தடியில் நிட்டை யில் தங்கினர். அம்மரத்தண்டை குளமொன்றுண்டு. ஒரு நாள்

ஆலிலை ஒன்று நீரினும் நிலத்திலும் பொருந்த வீழ்ந்தது. அது முறையே மீனும் பறவையுமாகி ஒன்றை ஒன்று கவ்வியிழுத்தன. அவ்வற்புதத்தைக் கண்ட நக்கீரர் மனமிளகி அவற்றைப் பிரித்து இழுத்தார். அவ்வளவில் அவை இரண்டும் குருதியைக் கக்கி இறந்தன. அவ்வளவில் கொடிய பூதம் ஒன்று அவரைத் தூக்கிச்சென்று குகையுள் அடைத்துவிட்டது. குகையுள் அடைபட்ட புலவர் 'செவ்வேளைப்பாடாக் குறையால் இவ்வவதி நமக்கேற்பட்டது' என்று எண்ணி, நினைத்ததை நினைத்தவாறுதவும் 'திருமுருகாற்றுப்படை' என்னும் அரிய நூலினைப் பாடி முடித்தார். உடனே அறுமுகன் புலவர் முன் தோன்றி, 'அன்ப! நீ இவண் வந்த காரணம் யாது? என, புலவர், 'அன்பனே! கைலைகாணவந்தேன்' என்றார். குமரவேள், 'இக்குளத்திலுள் மூழ்கித் தென்கைலைகாண்; நின்நோய் நீங்கும்' என்று கூறி மறைந்தார்.

நக்கீரர் நம்பனின் நன்மொழிப்படி தடத்தில் மூழ்கிப் பில வழியே சென்று பொன்முகரியாற்றினின்றும் எழுந்தார். எழுந்ததும் தாம் திவ்யதேகம் பெற்றிருத்தலைக் கண்டு மகிழ்ந்தார். தென்கைலாயமான சீகாளத்திப்பதியைத் தரிசித்து, கைலாயமும் காளத்தியும் ஒன்றென்று எண்ணியவராய் 'கைலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி' என்ற நூலைப்பாடி, நாளாறிற் கண்ணிடந்து அப்பிய கண்ணப்பனை ஆட்கொண்ட கண்ணுதலான் கழலடி நிழலிற் சேர்ந்தார்.

இப்புலவர் பெருந்தகை இயற்றிய நூல்கள் (1) திருமுருகாற்றுப்படை (2) நெடுநல்வாடை (3) கைலைபாதிகாளத்திபாதித் திருவந்தாதி (4) திருவீங்கோய்மலை எழுபது (5) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை (6) திருவெழுகூற்றிருக்கை (7) பெருந்தேவபாணி (8) கோபப்பிரசாதம் (9) காரெட்டு (10) போற்றித்திருக்கலி வெண்பா (11) கண்ணப்பதேவர்திருமறம் (12) நக்கீரர் நாலடி நாற்பது (13) களவியல் உரை என்பன.

# பழந்தமிழ்ப் புலவருங் கடவுள் வாழ்த்தும்

திரு. M. பொன்னையா M. A., தமிழ் விரிவுரையாளர்
அமரிக்கன் கல்லூரி, மதுரை.

(320-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அண்மைக் காலத்தில் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற் சில இயல்களுக்கு உரைவகுத்த டாக்டர். சோமசுந்தர பாரதியார் அவர்கள் தம் உரையில் இந் நூற்பாவிற்கு வகுக்கும் உரை இங்குக் கருதத்தக்கது. பாரதியார் அவர்கள் மேற்கண்ட நூற்பாவில் 'கந்தழி' என்பதைக் 'காந்தள்' என்று பாடங்கொண்டு, கொடிநிலை காந்தள், வள்ளி என்பன வெட்சிவகைப் பாடாண் பகுதி என்றும், அவை மூன்றும் கடவுட் பாவுதலுடன் பொருந்திவரும் என்றும் உரை வகுத்துள்ளார்.

இந் நூற்பாவில் கொடிநிலை, காந்தள், வள்ளி என்னும் மூன்று துறைகளும் பொதுவாகப் பாராவப்படுவதினின்று வேறுபட அமைந்து சிறப்பு வகையில் கடவுள் வாழ்த்தைத் தழுவி வருவதால் ஒடுக்கொடுத்துப் பிரிக்கப்பட்டன என்றும், முதலன மூன்றும் என்றது புறத்திணைகளில் முதல் திணையாகிய வெட்சித் திணையில் பாடாண் பகுதியாய்க் கடவுள் வாழ்த்தைத் தழுவி வருவன இவை மூன்றுமே என்றும் பாரதியார் அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்.

'கொற்ற வள்ளை ஓரிடத் தான'- புறத்திணையியல் 34.

என்ற நூற்பாவிற்கு உரைவகுத்த இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவரும் அது வஞ்சித் திணையடியாய்ப் பிறக்கும் பாடாண் வகையையே குறிக்கும் எனக் கருதிக் கூறுவது, கொடிநிலை காந்தள் வள்ளி என்பன அதன்முன் நின்று வெட்சிப்பாடாண் பகுதியிற் கடவுள் வாழ்த்தைத் தழுவிவருவன என்ற பாரதியாரவர்கள் கொள்கைக்குச் சிறிய ஆதரவாக இருக்கிறது.

இனி, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பனவற்றிற்கு வீரசோழிய உரையாசிரியர், கொடிநிலையாவது கொடியது தன்மை கூறுவது; கந்தழியாவது செருவில் திட்பமுடைமை; வள்ளியாவது முருகவேளைக் குறித்தது என்று கூறுவதனால் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலியோர் கொண்ட பொருளுக்கு மாறாகப் பொருள் கொள்வார் நெடுங்காலத்துக்கு முன்னரே இருந்தனர் என்பதற்குச் சான்றாகிறது. மேலும், 'கந்தழி' என்பதன் சரியானபாடம் 'காந்தள்' என்றும், தொல்காப்பியர் 'கந்தழி' என்று ஒருதுறை கூறவில்லை என்றும், சான்றோர் செய்யுளுள்ளும் அத்துறைக்கு இலக்கியம் இல்லை என்றும் ஏடெழுதுவோரே 'காந்தள்' என்பதைக் 'கந்தழி' என்று சிதைத்துள்ளனர் என்றும் டாக்டர் பாரதியார் அவர்கள் கருதுகின்றார்கள். எனவே, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பன கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து அதற்குப்பின் வருவன என்பது பொருந்தாமை துணியப்படும்.

இனி, தொல்காப்பியர்,

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப'—புறத்திணையியல். 26.

என்ற நூற்பாவில் கடவுள் வாழ்த்துக்கு இலக்கணம் கூறினார் என்று கருதுவாரும் உளர். ஆதலின், இந் நூற்பாவின் பொருளை ஈண்டு ஆராய்வது இன்றியமையாத தாகின்றது,

இந்நூற்பாவிற் காணப்படும் 'அறுவகை', வணக்க வகைகளைக் குறிக்கும் என்றும், அவை கொடிநிலை கந்தழி வள்ளி புலவராற்றுப் படை புகழ்தல் பரவல் என்றும் இளம்பூரணர் கூறுவர். நச்சினார்க்கினியர் அறுவகையாவன 'தேவர்பகுதி' என்று கூறிப் 'பிறப்பு வகையானன்றிச் சிறப்புவகையால் தேவர்கண்ணே வந்து முடிதலுடையவாகிய அறமுறை வாழ்த்து' என்று உரை செய்தார். 'இதனானே அமரர்கண்ணே வந்து முடியுமெனவே அமரர் வேறு என்பதூஉம், அவர்கண்ணே வந்து முடிவனவேறென்பதூஉம் பெற்றாம்' என்றும் கூறி, அவை, 'முனிவரும், பார்ப்பாரும், ஆனிரையும், மழையும் முடியுடை வேந்தரும் உலகுமாம்' என்று பகுத்துக் கூறினார். இதனால்

கடவுளை வாழ்த்துதலையும், கடவுட்சாதியாகிய மேற்கண்ட ஆறையும் வாழ்த்துதலையும் இந்நூற்பாவில் ஆசிரியர் தொல்காப்பியனார் குறிப்பிட்டதாக நச்சினார்க்கினியர் கொள்வது வெளிப்படை.

மரபுநிலை திரிதலாகாது என்ற கொள்கை தொல்காப்பியரிடம் அமைந்திருந்தமை பொதுவாக மரபியலாலும், சிறப்பாக அவ்வியலில் 'நூன் மரபு' கூறுங்காற் கூறும், 'மரபுநிலைதிரியின் பிறிதுபிறிதாகும்' என்ற நூற்பாவாலும் உணரக்கிடக்கின்றது. 'அமரர்கண்முடியும்' என்ற நூற்பாவை அடுத்துக் காணப்படும், 'வழக்கொடு சிவணிய வகைமையான' என்ற நூற்பா சிறப்பாக, 'அமரர்கண் முடியும் அறுவகை முதலியன' பண்டுதொட்டு வழக்கு வழி வந்தன என்பதும், அவ்வழக்கைத் தழுவி நூலமைப்பதே பின்னோருக்கும் விதி என்பதும் பொருளாகும். நச்சினார்க்கினியரும், 'புலனெறி வழக்கின் வேறுபடச் செய்பற்க என்பது இந்நூற்பாவின் கருத்து' எனக் குறித்துள்ளார். அவ்வாறு கருதுபவர் அதை நிறுவ ஒரு எடுத்துக்காட்டுந் தாராது அமைந்தமை வியப்பாகவே உள்ளது. மேலும், 'கடவுள் வாழ்த்துப் பாடுங்கால், முன்னுள்ளோர் பாடியவாறன்றி, முப்பத்துமூவருட் சிலரை விதந்து வாங்கிப் பாடப்பெறாது. இனி அறுமுறை வாழ்த்துப் பாடுங்கால் முன்னுள்ளோர் கூறியவாறன்றி ஆவிற்கு இனமாகிய எருமை முதலியனவும் வாழ்த்தப்படா' என்று கூறுவர். இக் கூற்றின்கண் நச்சினார்க்கினியர் முன்னுள்ளோர் என்றது, தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் முதலியோரின் வேறானவர்களையே என்பது அறியக்கிடக்கின்றது.

இனி, டாக்டர் பாரதியார் அவர்கள் தமது உரையிற் கூறுவதை நோக்குவோம். பாரதியார் அவர்கள் 'அமரர்' என்ற சொல் போர்மறவரைக் குறிப்பது என்று கொண்டு 'அமரர்கண் முடியும் அறுவகையானும்' என்பதற்குப் 'போர் மறவர்பாற் சென்று அமைவனவாக முன் இவ்வியலில் (புறத்திணையியலில்) விரித்து விளக்கிய வெட்சி முதல் காஞ்சி யீறான புறத்திணைவகை ஆறினும்' என்று உரை வகுத்தனர். எனவே அறுவகை யென்றது கடவுள் வாழ்த்தாகிய அறுமுறை வாழ்த்தன்று என்பது அவர் கருத்தென்பது துணியப்படும்.

இளம்பூரணர் 'அறுவகை' கொடிநிலை கந்தழி முதலிய ஆறு என்று கூறுவதற்கு ஆதாரமெதுவுங் காணப்படவில்லை. பின்னர் 'கொடிநிலை கந்தழிவள்ளி' என்ற நூற்பாவில் 'முதலன' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டது 'அமரர்கண் முடியும் அறுவகை'யில் முதலன (முகப்பில் அமைந்துள்ளன) என்று கருதி, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றையும் முதலிற் கூறி வேறு மூன்றையும் பிற்கூறி ஆறு என்ற தொகைக்கேற்ப அமைத்தனர் போலும். நச்சினார்க்கினியர் கூறும் அறுவகைக்கு அவர் கூறும் வேதங்களில் ஆதாரமில்லை. அது 'அவர் இங்கு கூறிய அறுவகையினவே தேவர்க்காம் வணக்கம் பெறற்குரிய வென்று எந்த வேதம் எப்பகுதியிற் கூறியுள்ளது?' என்று டாக்டர் பாரதியார் அவர்கள் வினவுவதால் உணரப்படும்.

இப் பாடாண்டிணைப் பகுதியின் உரைகாரர்கள் கூறும் உரைகள் இவ்வாறாக, போராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களை அணுகி அவர்கள் கருத்தைத் தெரிந்துகொள்ள முயன்றேன். திரு, பிள்ளையவர்கள்,

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங்காலை நாலிரண் டுடைத்தே'—புறத்திணையியல் 25.

என்ற நூற்பா, நாலும் இரண்டுமாகிய பாடாண்வகைகளை உணர்த்துகின்றது என்றும்,

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப"—புறத்திணையியல் 26.

என்ற நூற்பா பாடாண்பகுதியில் நாலும், இரண்டும் என்று குறிக்கப் பட்டவற்றுள் 'இரண்டு' என்ற ஒன்றன் பகுதி இவை என்கின்றது என்றும்', இந் நூற்பாவில் 'அமரர்கண்' என்பதன் சரியான பாடம் 'அமர்க்கண்' என்றே இருத்தல் வேண்டும் என்றும், 'அமர்க்கண் முடிவும் அறுவகை' என்பது பாரதியார் அவர்கள் கருதுகிறபடியே வெட்சி முதலிய அறுதிணைகளைச் சார்ந்துவரும் புறத்திணைப் பாடாண் பகுதி என்றும், 'புரைதீர் காமம் புல்லிய வகை' என்பது அன்பின் ஐந்திணையைப் பொருந்திவரும் பாடாண்பகுதி என்றும் கருதுவதாகவும்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'—புறத்திணையியல் 33.

என்ற நூற்பாவும்,

"கொற்ற வள்ளை ஓரிடத்தான"—புறத்திணையியல் 34

என்ற நூற்பாவும்,

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண்டு உடைத்தே"

என்ற நூற்பாவில் இரண்டுவகைகளாகக் கூறிக்கப்பட்டாலும், இரண்டும் என்ற பகுதிகளில் நான்கு என்ற ஒன்றன் பகுதியுள் அடங்கும் என்றும், அவ் விரண்டில், 'கொடிநிலை கந்தழி' என்ற நூற்பாவில் 'கொடிநிலை' என்பதன் சரியானபாடம் 'குடிநிலை' என்றே இருத்தல் வேண்டும் என்றும், 'கந்தழி'என்றதன் சரியானபாடம் பாரதியாரவர்கள் கருதுவதே போல் 'காந்தள்' என்பதே என்றும், கொற்றவள்ளை வள்ளைப்பாட்டாய் அமைந்து கடவுள் வாழ்த்தோடும், தலைவரான மக்கள் வாழ்த்தோடும் பொருந்திவரும் வேறுபாடுண்மையின் வேறு படக் கூறினர் என்றும் தாம் கருதுவதாகத் தெரிவித்தார்கள். அக் கருத்தும் அறிஞர் மனங்கொளற்குரியது.

எனவே தொல்காப்பியர் கைக்கிளைப் புறனாய் அமைந்த பாடாண் டிணையில் அமர்க்கண்ணும், அன்புடைக் காமவாழ்வின் கண்ணுஞ் சிறந்து விளங்குவாரைப், பரவலும் புகழ்ச்சியுங் கருதிய பாங்கின் வாழ்த்துதல் நிகழுமாறேபோல் கடவுள் வாழ்த்துதலும் வருவது உண்டு என்றே கூறுவதாக உணரலாம். அக் கடவுள் வாழ்த்தும் ஒரு மருங்கு நிகழும் நிகழ்ச்சியாகிப் 'பரவுதல் வெறியால்' நிகழும் ஒன்றாகவே காணப்படுகின்றது என்பதும் தாம் தொடங்கும் செயல் இனிது முடிவதற்காக ஏற்புடைக் கடவுளுக்கோ, வழிபடு கடவுளுக்கோ பாடும் கடவுள் வாழ்த்தைத் தொல்காப்பியர் தம் நூலின் முக நிலையில் அமைக்கவும் இல்லை, நூலில் யாண்டுங் கூறவும் இல்லை என்பதும் தெளிவாகின்றன.

# சேரமன்னர்

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

சேரநாட்டில் வாழ்ந்த மக்கள் சேரநாட்டுச் செந்தமிழ் மக்களாவர். பாண்டிநாட்டிலும் சோழநாட்டிலும் வாழ்ந்த மக்களைத் தமிழர் என்பது மரபாதலின் அம்மரபின்படியே சேரநாட்டவர் செந்தமிழ் மக்களாகின்றனர். பாண்டிநாட்டுத் தமிழர்க்குப் பாண்டியரும் சோழநாட்டுத் தமிழர்க்குச் சோழரும் வேந்தராயினது போலச் சேரநாட்டுத் தமிழ்மக்கட்குச் சேரர் வேந்தராவர். இந்நாட்டுக்குக் கிழக்கெல்லையாகச் சுவர்போல் தொடர்ந்து நிற்கும் மலை மேலைமலைத் தொடர். இது தெற்கே பொதியமலை முதல் வடக்கே தபதியாற்றங் கரை வரையில் நிற்கும். இந் நெடுமலைத்தொடர் வடவர்களால் சஹ்யாத்திரி யென்று பெயர் கூறப்படுகிறது. சஹ்யம்—தொடர்பு; அத்திரி-மலை. இத் தொடரைக் குடவரை யெனவும், சேரநாட்டவரைக் குடவரெனவும் பொதுவாகக் கூறுவது தமிழ்நாட்டின் வழக்கம். முதல் இராசராசனுடைய கல்வெட்டுக்கள் சேரநாட்டைக் குடமலை நாடு[1] எனக்கூறுவது காணலாம். சேக்கிழாரடிகள் "மாவீற்றிருந்த பெருஞ்சிறப்பின் மன்னும் தொன்மை மலைநாடு" என்றும் சேரமன்னர்களைப் "பாவீற்றிருந்த பல்புகழார்"[2] என்றும் பாராட்டிக்கூறுவர்.

இச் சேரமன்னர் மலைநாட்டில் வாழ்ந்தமையின் மலைகளிலும் மலைச் சரிவுகளிலும் மண்டியிருந்த பெருங்காடுகளில் வேட்டம் புரிவதையே தொடக்கத்தில் மேற்கொண்டிருந்தனர். அதனால் அவர்களுடைய கொடியில் வில்லே பொறிக்கப்பட்டிருந்தது. கடற்கரைப் பகுதியில் பனைமரங்கள் காடுபோல் செறிந்திருந்தன. அதனால் அவர்கள் தமக்கு அடையாளமாலையாகப் பனந்தோட்டால் மாலை தொடுத்து அணிந்து கொண்டனர். இன்னும் சேரநாட்டு வடபகுதிக் கடற்கரையில்

---

[1] பிற்காலச் சோழர்சரித்திரம். பக். 103. [2] திருத்தொண். புகழறிற். 1

பனைகள் மல்கியிருப்பது கண்கூடு. தொல்காப்பியனாரும் இச் சேரரது பனந்தோட்டு மாலையைச் சிறப்பாக எடுத்தோதுவர்.[1]

இந்நாடு மேலைக்கடலைச்சார்ந்துகிடத்தலின், சேரர்கள் கடலிற்கலஞ் செலுத்துதலிலும் சிறந்திருந்தனர். கிறித்து பிறப்பதற்கு மூவாயிரமாண்டுகட்குமுன்பே மேலையுலகத்து சால்டியா நாட்டுக்கு இந் நாட்டுத் தேக்குமரங்கள் மரக்கலங்களில் கொண்டுபோகப்பட்டன. பெட்ரோனியஸ் என்னும் மேனாட்டறிஞர் இந் நாட்டினின்றும் சென்ற ஆடைவகைகளை மிகவும் பாராட்டிப் பேசியிருக்கின்றார். இந் நாட்டிலிருந்து மேலைநாட்டுக்கு ஆண்டுதோறும் 4,86,679 பவுன் மதிப்புள்ள பொருள்கள் ஏற்றுமதியாயின என்று எழுதியுள்ளார்.[2] அந்நாளில் கடலகத்தே செல்லும் வணிகர் கலங்களைத் தாக்கிக்கொள்ளைகொள்வதும், கடற்கரையில்வாழ்ந்தமக்கட்கு இன்னல்புரிவதும் தொழிலாகச் செய்துதிரிந்த யாதர் (Yats) கடம்பர் (Kadambas) முதலாயினோரைக் கடலகத்தே எதிர்த்தழித்து வென்றி யெய்திய வகையால் இச் சேரமன்னர்கள் கடல் வாணிகம் செய்வார்க்கு நல்ல அரணாக இருந்து வாழ்ந்தனர். அதனால் அந்நாளில் சேரநாட்டுக்கலங்களைக் கண்டாலே பிறநாட்டுக் கலங்கள் கடலில் உரிமையுடன் இயங்குவதற்கு அஞ்சின; "சினமிகுதானை வானவன் குடகடல், பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப் பிறர்கலம் செல்கலாது"[3] எனச் சான்றோர் கூறுவது ஈண்டு நினைவுகூரத் தகுவது.

இச் சேரமன்னர்கட்குச் சங்கநூல்கள் மிகப்பல சிறப்புப்பெயர்களை வழங்குகின்றன. ஒருகால் அவை குடிப்பெயரோ எனவும் பிறிதொருகால் இயற்பெயரோ எனவும் ஆராய்ச்சியாளர்க்குப் பெருமயக்கத்தை நல்கியதுண்டு. ஏனைச் சோழ பாண்டியர்களின் வரலாறுபோல் இவரது வரலாறு எளிதிற்காண வியலாமல் இருப்பதற்கு இந் நிலையும் ஓர் ஏதுவாகக் கிடக்கிறது. அவைகளுள் வானவரம்பன், வானவன், குட்டுவன், குடக்கோ, பொறையன், இரும்பொறை, கடுங்கோ, கோதை, கோ என்பன சிறப்புடையனவாம். சேரலர், சேரல், சேரமான் என்பன பொதுப் பெயர்.

---

[1] தொல். புறத். 5. [2] Logan's. Malabar p. 3110. [3] புறம். 126.

"வென்றி நல்வேல் வானவரம்பன், [1] வானவரம்பனை நீயோ பெரும" [2] "தேனிமிர் நறுந்தார் வானவன்" [3] "பெரும்படைக் குதிரை நற்போர் வானவன்," [4] வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை," [5] "வசையில் வெம்போர் வானவன்", [6] "சினமிகு தானை வானவன்," [7] மாண்வினை நெடுந்தேர் வானவன்", [8] வில்கெழு தடக்கைவெல்போர் வானவன்," [9] எனவருவன வானவன் வானவரம்பன் என்ற பெயர்கள் பண்டைநாளைச் சான்றோர்களால் பெரிதும் விதந்து கூறப்படுவதை எடுத்துக் காட்டுகின்றன.

இந்த வானவன்என்ற பெயர் பொருளாக ஆராய்ச்சிசெய்த அறிஞர்கள், "இவரை வானவன் என்ற பெயரால் பண்டை நூல்களும் நிகண்டுகளும் குறிக்கின்றன; இதனால் இவ்வமிசம் தெய்வசம்பந்தம் பெற்றதென்பது மட்டில் தெளிவாகும்" என்பர். வானவரென்ற பெயர் சீனநாட்டவர்க்கு இன்றும் வழங்கிவருவதால், சேரர், "ஆதியில் சீனதேசத்திலிருந்து வந்தவர்" எனத் திரு. கனகசபைப்பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள். வானவரம்பன் என்பது வானவர் அன்பன் என்ற இருசொற்களாலாகிய தொரு தொடரென்றும், அது திரிந்து வானவரம்பன்என வழங்குவதாயிற்று என்றும் இது, "தேவானும் பிரியா" என அசோக மன்னனுக்கு வழங்கும் சிறப்புப்போல்வதென்றும் சிலர் கருதுகின்றனர். வானம் என்பது கடலுக்கொரு பெயரென்றும், அதனால் வானவரம்பன் என்றது கடலை எல்லையாக உடையவனென்று பொருள்படும் என்று வேறுசிலர் கூறுவர். மற்றும்சிலர் வானமும் நிலமும் தொடுமிடத்தை எல்லையாகவுடையவன் வானவரம்பன் என்பர். பிற்கால மலையாள நாட்டவர் பாணவன்மன் எனத் திரித்துக் கொள்வர். இங்கேகூறிய பொருள்களுள் தேவானும் பிரியா என்றதொடர் "தடித்த முட்டாள்" என்னும் பொருள்படத் துறவிகளை வைதுரைக்கும் வைதிகமொழி [10] யாகலின் வசைமொழியைச்

---

[1] அகம். 4ட. [2] புறம். 2. [3] அகம். 381, [4] அகம். 309. [5] அகம். 213. [6] அகம். 213. [7] அகம், 143. [8] புறம். 126. [9] அகம். 159, M. இராகவையங்கார் சேரன்செங்குட்டுவன். பக். 39. [10] Madras Discourses of Sri. Sankaracharya P. 147, 163.

சேரர் தமக்குச்சிறப்புப்பெயராகக்கொண்டனரென்பது "தடித்த முட்டாள் தனமாக"க்காணப்படுகிறது. ஏனையவற்றின் பொருந்தாமையை ஈண்டு விரிக்கவேண்டுவதில்லை; உண்மை விளங்காக் காலத்தெழுந்த ஊகங்கள் அவை என்பது ஒருவரும் எடுத்துரைக்காமலே இனிது விளங்குவது.

சேரநாட்டுக்குவடபகுதியில் ஏழில்மலையைத் தன்கண்கொண்டிருந்த நாட்டுக்குக் கொண்கானநாடு என்று தமிழ்மக்கள் வழங்கினர். ஏழில்மலையைச் சொல்லத்தெரியாத பிறமக்கள் அதனை எலிமலையென்று வழங்கினர்; இன்றும் அவ்வாறே வழங்குகின்றனர். எனவே, அவர்கள் அந்நாட்டை எலிநாடு என்ற பொருளில் மூஷிகநாடு என்று கொண்டது முன்பே கூறப்பட்டது, அதற்கு வடக்கிலுள்ள நாட்டுக்கு வானவாசி நாடு என்பது பெயர். மேலைக்கடற்கரை நாடுகளை முறைப்படுத்துரைத்த வியாசபாரதம் "த்ராவிடா: கேரளா: ப்ராச்யா மூஷிகா வனவாஸிகா:"[1] என்று கூறுவது போதிய சான்றாகும். ஏழில் மலையைச் சூழ்ந்த நாட்டுக்கு மூஷிகநாடு என்று பெயர் வழங்கினமை "மூஷிகவம்சம்" என்ற நூலால்[2] தெரிகின்றோம். இதனால் மூஷிக நாடு எனப்படும் கொண்கான நாட்டுக்கு வடக்கில் வானவாசி நாடு இருப்பது தெளிய விளங்குகிறது. வானவாசி என்பது கல்வெட்டுக்களில்[3] வானிவாசி என்றும் குறிக்கப்படுகிறது, படவே சேரநாட்டின் வடக்கில் அதனையடுத்து எல்லையாகஇருந்தது வானவாசிநாடாயிற்று.

வானவாசி நாட்டை கி- மு, ஆறும் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே ஆட்சிபுரிந்தவர் கடம்பர் எனப்படுவர். அவர்களது வானிவாசி நாட்டில் இப்போதுள்ள கோவாப் (Goa) பகுதியும் அடங்கி யிருந்தது. அப்பகுதியில் கடம்பர்களுடைய கல்வெட்டுக்கள் இப்போதும் காணப்படுகின்றன. அந்நாட்டில் வானியாறு என்றோர் ஆறும் ஓடி

---

[1] பாரதம், பீஷ்மபருவம், ix 58.
[2] T. V. C. Arch. S. Vol. i. P: 37-113.
[3] Bombay Gazet. Kanara part ii. P. 77.

கிறது. அது கிழக்கில் நிற்கும் மலைமுகட்டில் தோன்றி 850 அடி ஆழத்திற் குதித்து மேற்கே ஓடிச் சிலகால்களாகப் பிரிந்து மேலைக் கடலில் சென்று சேர்கிறது.

இப்போது வடகன்னடம் ஜில்லாவில் மேலைக் கடற்கரையில் உள்ள ஹோனவார் (Honowar) என்னும் மூதூர் அந்த ஆற்றின் ஒருகிளை கடலோடு கலக்குமிடத்தே இருக்கிறது. அந்தக் கிளையும் ஹோனவாறென்றே பெயர்கொண்டு நிலவுகிறது. அதனுடைய பழம்பெயர் வானவாறு என்பது என்று அங்குள்ள முகமதிய முதுவர்கள் மொழிகின்றனர். மலைமுகட்டில் தோன்றிக் கடலொடு கலக்குங் காறும் அதன்பெயர் வானியாறே தான்; இப்போது அந்தஆறு கடல் சேர்ந்த பகுதியில் பலகிளைகளாய்ப் பிரியுங்காறம் ஷிராவதி யென்ற பெயர் கொண்டிருக்கிறது. ஜோக் கென்னும் ஊருகே[1] இந்த ஷிராவதி 850 அடி உயரத்திலிருந்து வீழ்ந்து மேலைக்கடலை நோக்கி ஓடுகிறது. தோற்றமுதல் முடிவுவரை வானியாறாக இருந்து இடையில் சோவாறு என்ற பெயர்பெற்ற, இப்போது அது திரிந்து ஷிராவதியாய் விட்டது. திருவையாறு திருவாடி யென்றாகித் திருவாதியானது காண்போர் சோவாறு ஷிராவதியானதுகண்டு வியப்பெய்தார் துளுநாட்டுத் தோகைக்கா என மாமூலனார் கூறும் (அகம். 15) அந்த ஊரே இப்போது ஜோக் (Joag) என வழங்குகிறது.

தெற்கே பொன்வானி போல வடக்கில் இந்த வானியாறு இருப்பதை நோக்கின் பண்டைநாளில் சேரர்நாட்டுக்கு வட எல்லையாக இந்த வானியாறு விளங்கிற்றென்பது இனிது விளங்கும். இதற்கு வடக்கில் வேளகமும் வடகிழக்கில் வானவாசிநாடும் இருந்தன. இதனை ஆண்ட கடம்பர்கள் சேரநாட்டில குறும்பு செய்தொழுகினமை சங்க இலக்கியங்களால் தெரிகிறது. ஒருகால் அவர்கள்சேரர்க்குரிய கொண்கான நாட்டுட் புகுந்து குறும்புசெய்து இப்பகுதியைத் தமது வானவாசி நாட்டோடு சேர்த்துக்கொள்ள முயன்றனர். நாடோறும் அவர்

[1] Joag falls is popularly known as Gersappa Falls. Gersappa is a village about 13 miles from the Falls. ஜோக் என்னும் ஊரின் பழம்பெயர் தோலகக்கா; அது தோக்கா என மருவிப் பின்பு ஜோக் என ஆய்விட்டது.

களது குறும்பு பெருகக்கண்ட சேரவேந்தர் பெரும் படையுடன் சென்று கடம்பர்களைத் தாக்கி வென்று வானியாற்றின் வடக்கிற் சென்று ஒடுங்குமாறு செய்தனர். இவ்வகையால் கடம்பர்கள் மீள மீளப் போர் தொடுக்காவண்ணம் சேரரும் கடம்பரும் ஒன்றுகூடி வானவாற்றை வரம்புசெய்து கொண்டனர். வானியாறு சேரருக்கு உரியதானமையின், அதுவே பின்பு சேரவாறாயிற்று; அச்சேரவாறே இன்றைய ஷிராவதி என்பது மறவற்க. இச்செய்கையால் சேரவேந்தனான சேரமான் வானவாறன் என்றும் வானவாறு வரம்பன் என்றும் சிறப்புப்பெயர் பெற்றான். அப்பெயர்கள் பின்னர் வானவன் எனவும் வானவரம்பன் எனவும் வழங்கலாயின. சங்கத் தொகைநூல் பாடிய ஆசிரியர்கள்காலத்துக்குப் பல்லாண்டுகட்கு முன்னர் இது நிகழ்ந்து மருவினமையால், வானவன் என்றும் வானவரம்பன் என்றும் சேர மன்னர்களைத் தாம் பாடிய பாட்டுக்களில் சிறப்பித்துப் பாடினர்.

சேரநாட்டையாண்ட மன்னர்கள் தங்கள் நாட்டைக் குட்டநாடென்றும் குடநாடென்றும் பிரித்து ஒருகாலத்தே ஆட்சிநடத்தினர். வடபகுதியில் குடநாட்டின் பகுதியாய் வானவாசிநாட்டை அடுத்திருந்த கொண்கானநாட்டைச் சேரர் குடிக்குரிய நன்னன் மரபினர் ஆட்சிபுரிந்தனர். கொண்கானநாட்டின் கிழக்கிலுள்ள புன்னாடும் (Punnata) அந் நன்னன்மரபினர் ஆட்சியிலே இருந்தது. புன்னாட்டின் தெற்கில் குடநாட்டுக்குக் கிழக்கில் இருந்தநாடு சேரர்குடியில் தோன்றிய வேளிர்தலைவரான அதியமான்கள் ஆட்சியில் இருந்தது; அது பின்னர்த் தகடூர் நாடெனப் பெயர் வழங்கலாயிற்று.

தெற்கே கோட்டாற்றுக்கரை கொல்லம் என்ற பகுதியை எல்லையாகக்கொண்ட குட்டநாட்டில் குட்டுவரும் குடநாட்டில் குடக்கோக்களும் இருந்து சேரவரசைச் சிறப்பித்தனர். குட்டநாட்டுக்கு வஞ்சிநகரும், குடநாட்டுக்குத் தொண்டியும் சிறந்த தலைநகரங்களாகும். ஒருகுடியில் தோன்றிய இருவருள் முன்னவன் குட்டநாட்டிலும் பின்னவன் குடநாட்டிலும் இருந்து அரசியற்றுவன். குட்டநாட்டு வேந்தன் குட்டுவர் தலைவனாகவும் குடநாட்டுவேந்தன் குடவர்கோவாகவும் விளங்குவன்.

சில பல ஆண்டுகட்குப்பின்னர் அரசிளஞ்சிறுவர்கட்கு ஆட்சி நல்குதல்வேண்டிக் குட்டநாட்டின் வடபகுதியையும் குடநாட்டின் தென்பகுதியையும் ஒன்றாய் இணைத்துப் பொறைநாடு எனத் தொகுத்துத் தொண்டியை அதற்குத் தலைநகராக்கினர். இவ்வாறே கொச்சிநாட்டின் வடகீழ்ப்பகுதி பூழிநாடு எனப்பிரிந்து இயலுவதாயிற்று. இந்நாடுகளில் இருந்து ஆட்சிபுரிவோருள் ஆண்டில் முன்னேன் எவனே அவனே முடிசூடும் உரிமையுடைய சேரமானவன். பிற்காலத்தே பொறைநாட்டின் கிழக்கில் கொங்குநாட்டையடுத்த பகுதியைக் கடுங்கோநாடு எனப் பிரித்து ஆட்சிசெய்தனர். அவ்வேந்தர் கடுங்கோ எனப்பட்டனர். இவ்வாற்றால் சேரநாடு பண்டைநாளில், குட்டநாடு, பொறைநாடு, குடநாடு, கடுங்கோநாடு எனப்பிரிந்திருந்தமை பெறப்படுகிறது. வேந்தரும் அதுபற்றியே "பல் குட்டுவர் வெல்கோவே"[1] "தெறலருந்தானைப் பொறையன்"[2] குடக்கோ நெடுஞ்சேரலாதன், பாலைபாடிய பெருங்கடுங்கோ என்று பெயர் கூறப்படுவாராயினர். இவ்வாறு வேறுவேறாகக் கூறப்படினும் சேரமான் ஒருவனே ஒருகால் சேரல் என்றும், வானவன் என்றும் குட்டுவன் என்றும் இரும்பொறையென்றும் கூறப்படுவன். இதனால் இவர்கள் அனைவரும் சேரர்குடிக்குரியோர் என்பது துணிபாம். "குடபுலங் காவலர் மருமான், ஒன்னார் வடபுல இமயத்து வாங்குவிற்பொறித்த, எழுவுறழ்திணிதோள் இயல்தேர்க் குட்டுவன்"[3] என்றாற்போல வருவன பலவுண்டு. இவற்றைக்கொண்டு இவர்கள் வேறுவேறு குடியினரென மயங்கிவிடுதலாகாது. அது பின்னர்வரும் வரலாற்றால் இனிது விளக்கும்.

பண்டைநாளைத் தமிழ்வேந்தர் அரசெய்தியமுறை ஒரு தனிச்சிறப்பு முறையாகும். ஒருவேந்தனுக்கு மூன்று புதல்வர்களெனின் அவர்கள் ஒருவர்பின் ஒருவராக முடிசூடிக்கொள்வர். முன்னவன் முடிவேந்தனாகப் பின்னோர் இருவரும் நாட்டின் இருவேறு பகுதிகளில் சிற்றரசாய் முடிவேந்தற்குத் துணைபுரிவர். இம் மூவரும் முடிசூடி வாழ்ந்தபின்பே இவர்மக்களுள் மூத்தவன் எவனே அவன்முடிவேந்த

[1] மதுரை. 105. [2] சற். 18. [3] சிறுபாண். 47.

னுவன். இம்முறை இடைக்காலச் சோழவேந்தரிடத்தும் இருந்திருக்கிறது. முதற்பராந்தகனுக்கு இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசீலியென மக்கள் நால்வர் உண்டு. அவர்களுள் இராசாதித்தன், பராந்தன் இருக்கும்போதே இறந்தான். அதனால் பராந்தகனுக்குப்பின் கண்டராதித்தன் சோழவேந்தராய் முடிசூடிக்கொண்டான். அவனுக்குப்பின் அரிஞ்சயன் முடி வேந்தானான். அவனுக்கு முன்பே உத்தமசீலிமறைந்துபோனான். கண்டராதித்தனுக்கு உத்தமசோழனென்றொரு மகனும் அரிஞ்சயனுக்குச் சுந்தரசோழனென்றொரு மகனும் இருந்தனர். அவ்விருவருள், சுந்தரசோழன் மூத்தவனாதலால் முதலில் அவனும், அவற்குப்பின் உத்தமசோழனும் முடிவேந்தராயினர். உத்தமசோழனுக்குப்பின் அவன்மக்களுள் மூத்தவனான ஆதித்தகரிகாலன் தந்தையிருக்கும்போதே இறந்தமையின் இளையோனான முதல் இராசராசன் முடிவேந்தனாய்த் திகழ்ந்தான். இதேமுறைதான் பண்டைநாளைத் தமிழ்வேந்தர் அரசுரிமை முறையாக இருந்தது. (ஆகவே, தந்தைக்குப்பின் அவனுடைய மூத்த மகன்; அவனுக்குப்பின் அவனுடைய மூத்தமகன் எனவரும் அரசியல் தாயமுறை (Primogeniture) தமிழ்நாட்டுக்கு உரியதன்று என்பது தெளிவாக உணரவேண்டியதொன்று.)

இவ்வாறே சேரமன்னருள் உதியஞ்சேரலாதன் என்பவனுக்கு இமயவரம்பன், நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் எனமக்கள் இருவருண்டு. இமயவரம்பன் சேரமானாய் முடிசூடியிருந்த பின், அவன்தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் சேரமானாய் முடிசூடிக்கொண்டான். அவற்குப்பின் இமயவரம்பன் மக்களுள் மூத்தவனான களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் அவன்பின் செங்குட்டுவனும் அவற்குப்பின் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் சேரநாட்டு முடிவேந்தராய் விளங்கினர்.

அரசர்குடியிற் பிறந்த அரசிளஞ்சிறுவர்கட்கு அரசாளும் திறம் நல்கவேண்டி நாட்டைச் சிறுசிறுநாடுகளாக வகுத்தாளும் முறையுண்டானதன்பயனாக ஏனையநாடுகளைப் போலச் சேரநாடு சிறுசிறு நாடுகளாகப் பிரியவேண்டிவந்தது. இதுபற்றியே ஒருநாழிகை துலையிற்குள் ஒன்பதுநாடுகளைக் கடந்தாகவேண்டும் என்ற கருத்துடைய பழ

மொழியொன்று இன்றும் மலையாளநாட்டில் வழங்குகிறது. இடைக் காலத்தில் சேரநாடு பதினெட்டுச் சிறுநாடுகளாகப் பிரிந்திருந்தமைக்கும் இதுவே காரணம்.

சோழநாட்டுக்கு உறையூரும் பாண்டிநாட்டுக்கு மதுரையும் போலச் சேரநாட்டுக்கு வஞ்சிமாநகர் தலைநகரமாகும். பாண்டியநாட்டுக்குக் கொற்கையும் சோழநாட்டுக்குக் காவிரிப்பூம்பட்டினமும்போலச் சேரநாட்டுக்கு முசிறியும் தொண்டியும் கடற்கரை நகரங்களாக விளங்கின. காவிரி கடலொடுகலக்குமிடத்தே காவிரிப்பூம்பட்டினமும் தண்ணான்பொருநை கடலொடு கூடுமிடத்தே கொற்கையும் போலப் பேரியாற்றின்கிளையாகிய சுள்ளியாறு கடலொடு கூடுமிடத்தே முசிறிநகர் இருந்தது. இதனை மேனாட்டுயவனர்களான பெரிப்ளூஸ் ஆசிரியரும் பிளினி என்பாரும தங்கள்குறிப்பில் குறித்திருக்கின்றனர். இந்நகரின்பகுதிபாய் இதற்குக்கிழக்கில் இருந்தது வஞ்சிநகர்; வஞ்சிக்கு வடமேற்கிலும் முசிறிக்கு நேர்வடக்கிலும் ஏழுஎட்டுக்கல் தொலையில் கருவூர்நகரம் இருந்தது.

தொண்டிநகர் குடநாட்டில் கடற்கரையில் இருந்ததொரு நகரம். குட்டநாட்டு வஞ்சிபோலக் குடநாட்டுக்குத்தொண்டி சிறந்து நின்றது. குடநாடு பொறை நாடென்றும் குட நாடென்றும் பிரிந்தபோது தொண்டி பொறைநாட்டில் அடங்கிற்று. இப்போது அது சிற்றூராய்க் குறும்பொறைநாடுதாலூகாவில் உளது. குடநாட்டுக்கு நறவூர் என்றோரூர் தலைநகராய் விளங்கிற்று; இப்போது அது குடகு நாட்டில் நறவுக்கல் பெட்டாவில் உளது.

தொண்டிநகர் கடற்கரையில் இருந்தமையின் யவனர்கட்கு அது நன்கு தெரிந்திருந்தது. இது மிக்கசிறப்புடையவூர் என்று பெரிப்புளூஸ் என்னும்நூல் கூறுகிறது.[1] சங்கத்தொகைநூற் பாட்டுக்களும் இதனைப்பல்வகையாலும் பாராட்டிக் கூறுகின்றன. இவற்றின் வேறாக மாந்தை, மாந்தையென நகரங்கள் சிலகூறப்படுகின்றன. அவற்றின் நலங்கள் வருமிடங்களில் ஆங்காங்கே விளக்கப்படும்.

---

[1] M 'Crindles' Translation P. 58.

திருவாங்கூர்நாட்டு எட்டுமானூர், அம்பலப்புழை, செங்கணான் சேரி, கோட்டயம் என்றபகுதிகளும் கொச்சிநாட்டுப்பகுதியும் பொன்னானி தாலூகாவின் குட்டநாட்டுப் பகுதியும் ஒன்று சேர்ந்த பகுதி குட்டநாடு என இப்போதும்வழங்குகிறது. இதன்வடக்கில் பொறை நாடும் கிழக்கிற் பூழிநாடும் கொங்கு நாடுகளும் தெற்கில் தென்பாண்டிநாடும் மேற்கில் கடலும் எல்லைகள். இந்தநாட்டில் பேரியாறும் அதன்கிளைகளான பொருநை, சுள்ளியென்ற ஆறுகளும் பொன்வானியாறும் வேறுபல சிற்றாறுகளும் பாய்தலால் இந்நாடு நல்ல நீர் நிலவளஞ்சிறந்தது. இது தெற்கிலுள்ள நாஞ்சினாடுபோல மிக்க நெல் விளையும் நீர்மையுடையது. திருவாங்கூர் அரசுக்குட்பட்ட குட்டநாட்டுப்பகுதிமட்டில் இருநூறாயிரம் ஏக்கர் நிலம் நெல்பயிரிடத்தக்க வகையில் அமைந்துளது என்பர்[1]. அண்மையில் நிற்கும் மலைமுடிகளிற் பெய்யும் மழைநீர் இழிந்து விரைந்தோடி வந்து கடலில் மண்டுங்கால் கடற்கரை யுடைந்து குட்டங்கள் (காயல் என இக்காலத்து வழங்கும் கானற்பொய்கைகள்) பல பல்கி யிருப்பது பற்றி இந்நாடு குட்டநாடு எனப் பண்டைநாளைச் சான்றோர்களால் பெயர் வழங்கப்பட்ட தென்னலாம். இங்குள்ள குட்டங்களில் பல ஆழ்ந்தகன்று சிறுசிறு மரக்கலங்களும் நாவாய்களும் இனிது இயங்குதற்கேற்ப அமைந்துள்ளன. இங்கேவாழ்ந்த மக்கட்குவேண்டும் உணவுப் பொருள்களும் மலைபடுபொருள்களும் காடுபடுபொருள்களும் கடல்படு பொருள்களும் பெருகக்கிடைத்தமையால் கடற்கு அப்பாலுள்ள நாட்டவரோடு பெருவாணிகம்செய்து சிறந்தனர். அதனால் மேனாட்டு யவனரும் கீழைநாட்டுச் சீனரும் பிறரும் இந்நாட்டில் போக்குவரவு புரிந்தனர். அரேபியா ஆப்பிரிக்கா என்ற நாட்டுக் கடற்கரையில் குட்டநாட்டுத் தமிழ்மக்கள்சிலர் குடியேறியிருந்தனரென்று மேனாட்டவருடைய பழஞ்சுவடிகள் கூறுகின்றன. இவ்வாறு பெருங்கடல் கடந்துசென்று அரிய வாணிகம்செய்த பெருந்துணிவுடைய மக்கள் தென்கடற்கரைநாட்டுத் தென்தமிழரல்லது வடவாரியரல்லர் எனக் கெண்ணடி (Mr. Kennady) என்பார் கூறியுள்ளார்.

இக்குட்டநாட்டுக்குத் தலைநகரம் சேரநாட்டுக்குப் பொதுவாகத் தலைநகரமெனக் குறிக்கப்பெற்ற வஞ்சிமாநகரமாகும். கடற்கரையையொட்டித் தொடர்ந்துவிளங்கும் கா[illegible]டத்தின் கீழ்க்கரையில்

[1] Travancore State Manual Vol. iv. P. 699—700.

இந்நகரம் இருந்திருக்கிறது. இக்குட்டம், கொச்சி, கொடுங்கோளூர், சேர்த்துவாய் என்ற மூன்றிடங்களில் கடலொடு கலந்துகொள்கிறது. கொடுங்கோளூரென்பது வஞ்சிநகர்க்கு இடைக்காலத்து உண்டாகி வழங்கியபெயர். மலைநாட்டுக் கொடுங்கோளூர்[1] என்று கல்வெட்டுக்கள் கூறுவதுகாண்க. அதன் ஒருபகுதியான வஞ்சிக்களம் (புறம் 378) அஞ்சைக்களம் (சுந்: தேவா 4) என்றும் வஞ்சிக்குளமென்றும் (S, I. I. Vol. V No. 789) வழங்குவதாயிற்று. இதனால் வஞ்சிநகர் கடற்கரைத் துறைமுகமாகவும் விளங்கியது காணலாம். வஞ்சிமுற்றத்தே யிருக்கும் காயல் கடலொடுகூடும் கூடல்வாயின் தென்கரையில் முசிறியும் வடகரையில் நாலைந்துகல் தொலையில் கருவூரும் இருந்தன. கருவூர் இப்போது கருவூர்ப்பட்டினமென வழங்குகிறது. இவற்றின் இடையே காயலில் கீழ்ப்பகுதியில் பேரியாற்றின் கிளைகளுள் ஒன்றான சுள்ளியாறு வந்து கலக்கின்றது. தென்மேற்கில் முசிறிநகரும் வடமேற்கில் கருவூரும் தன்கண் அடங்க இடையிற்கிடந்த காயற்குட்டத்தை நாவாய்க்குளமாகக் (Harbour) கொண்டு வஞ்சிமாநகர் விரிந்த பண்புடன் விளங்கினமை இதனால் இனிது பெறப்படும். இதுபற்றியே சான்றோர், ஏனை உறையூர் மதுரை என்ற நகர்களோடு ஒப்பவைத்து இவ்வஞ்சிநகரைச் சிறப்பித்து "சேரலர்...வளங்கெழுவஞ்சி"[2] எனவும், "பொலந்தார்க் குட்டுவன் முழங்குகடல் முழவின் முசிறி"[3] எனவும் பாடியுள்ளனர். மேலைநாட்டு யவனருடைய கலங்கள் நேரேவருங்கால் முதற்கண் முசிறித் துறைக்கு வரும் என்றும், அத்துறையில் கலங்கள் கடலில் மிக்கதொலையில் நிற்குமென்றும், பொருள்கள் சிறுசிறு நாவாய்வழியாக ஏற்றுமதி இறக்குமதிசெய்யப்படு மென்றும் பிளினி என்பார் கூறுகின்றார்.[4]

ஒருபால் பெருமலையும் ஒருபால் பெருங்கடலும்நிற்க இடையில் பெருங்காடு படர்ந்து கொடுவிலங்கும் கடுவரற் காட்டாறுகளும் மிக்குள்ளநாட்டைச் சீர்செய்து மக்கள்குடியிருந்துவாழ்வதற்கு ஏற்றவாறு அமைத்த பண்டைச் சேரநாட்டுமக்களுடைய தொன்மை வரலாறு எண்ணமுடியாத அளவினதாகும், காடுகொன்று நாடாக்கி வினைபொருளும் கடல்வாணிகமும் பெருகுவித்தற்கண் அம்மக்கள்கழித்த

---

[1] A. R. No. 313 of [illegible]. [2] அகம். 149. [3] புறம். 343.
[4] Nagam Iyer T. V. C. Manual Vol. i. P. 291.

யாண்டுகள் எண்ணிறந்த பலவாம். நாட்டுமக்களது நல்வாழ்வுக்கென அரசுகாவலும் செங்கோன்மையும் வேண்டப்படுதலின், அத்துறையில் அம்மக்கள் பெரும்பணி செய்திருத்தல் வேண்டும்.

நம்நாட்டில் பழமையான நூல்கள் எல்லாவற்றினும் மிகப்பழமை வாய்ந்தவை எனப்படும் நூல்களில் இந்நாட்டுச் சேரமன்னர் குறிக்கப் பெறுவதால், இவர்களது முதன்முதல் தோற்றம் வரலாற்றெல்லைக்கு அப்பாற்பட்டதென்பது சொல்லாமலே விளங்கும்.

சோழநாடு சோழவளநாடு என்றும் பாண்டிநாடு பாண்டிவளநாடென்றும் வழங்கியதுண்டு; அவற்றைப்போலவே, சேரநாடு சேரவளநாடு என்று தொடக்கத்தில்வழங்கிப் பின்பு சேரலர்நாடென மருவிற்று; சேரரும், சேரலர்என்றும் சேரல் என்றும் கூறப்படுவாராயினர். கடல்சேர்ந்த நிலத்தைச் சேர்ப்பென்றும், அந்நிலத்துத்தலைவர்களைச் சேர்ப்பரென்றும் கூறுவது தமிழ்நூல்வழக்கு. அவ்வழியேநோக்கின் சேரநாடும் தொடக்கத்தில் சேர்ப்புநாடென விளங்கிப் பின்சேரநாடெனத்திரிந்துவிட்டது. சேர்ப்பர் சேரராயினர்.[1] சேரலர்என்ற பழம் பெயர் பிறநாட்டுமக்களால் கேரளரெனக் குழறிக்கூறப்பட்டது; அதனால் சேரலர்நாடு அவர்களால் கேரளநாடாகக் கூறப்படுவதாயிற்று.

இடைக்காலத்தே தோன்றிய கல்வெட்டுக்கள்பலவும் சேரநாட்டை மலைநாடெனவும் மலைமண்டலமெனவும் குறிக்கின்றன. அதுவழியே நோக்கின், மலைநாடு, மலைவளநாடெனவும் மலைப்பால் நாடெனவும் கூறப்படுப இயைபுபெறுவதாயிற்று. அப்பெயர்கள் பின்னர் வேற்றுமொழியாளரால் மலையாளமென்றும் மலபார்என்றும் சிதைந்து வழங்கப் படுவவாயின. ஆதலால். அந்நாட்டவர் மலையாளிகளாயினர்; அவரது மொழி மலையாளமாயிற்று..

இச்சேரநாட்டுப் பகுதியில் குட்டநாடே ஏனைப் பொறைநாடு' பூழிநாடு, குடநாடு முதலியவற்றை நோக்க மிக்க வளம்பொருந்தியதென்பது நாடறிந்தசெய்தி. நிலவளம் மிக்கவிடத்தே மக்கள்உடல்

---

1 சேர்ப்புத்தலை சேர்த்தலை யெனவும், சேர்ப்புவாய் சேர்த்துவாய் எனவும் வழங்குவது காண்க.

வளமும் அறிவுவளமும் பெருகியிருப்ப ரென்பது நிலனன் முடிபு. அதனல், தொடக்கத்தில் சேரவரச குட்டநாட்டில்தான் உருக்கொண்டு சிறந்ததென்பது தெளிவாம். சேரவேந்தர்க் குரியதெனப் பேசப்படும் வஞ்சிநகர் இக்குட்டநாட்டில் இருப்பதே இதற்குப் போதிய சான்று. ஆகவே, சேரவேந்தருட் பழையோர் குட்டநாட்டார் என்று அறியலாம். மலையாளம் ஜில்லாவிலுள்ள ஏர்நாடு தாலூகாவில் சேரநாடு என்ற பெயருடைய சிறுநாடொன்று காணப்படுகிறது. இது குட்டநாட்டையடுத்து வடக்கில் கடற்கரையைச் சார்ந்திருப்பதால், குட்டநாட்டுச் சேரர் தங்கள்நாட்டை விரிவுசெய்தபோது தொடக்கத்தில் கொண்டது இப்பகுதி யென்பதும், குறும்பர்நாடு தாலூகாவிலுள்ள வடகரை யென்னும் நகரும், அதனருகேயோடிக் கடலொடு கலக்கும் சேரவாறும், சேரபுரம் என்னும் பேரூரும் காணுங்கால், சேரநாடு பின்பு இவ்வடகரை வரையிற் பரவிற்றென்பதும், முடிவில், வட கன்னடம்ஜில்லாவிலுள்ள வானியாறும் சேரவாறும் இன்றுகாறும் நின்று விளங்குவதால், சேரநாடு முடிவாகப் பரந்துநின்றது அப்பகுதிவரையில் என்பதும் உய்த்துணரப்படும். இத்துணைப்பரப்புக்கும்தோற்றுவாய் குட்டநாடு என்பது நினைவுகூரத்தக்கது.

இவ்வாறு, சேரநாடு படிப்படியாகப்பரந்து பெருகியது காட்டும் குறிப்புக்கள் ஊர்ப்பெயராகவும் ஆறுகளின்பெயரர்கவும் மலைக்குன்றுகளின் பெயராகவுமே உள்ளன. வரலாறுகூறும் கருத்துடைய நூல்களும் பாட்டுக்களும் நமக்குக் கிடைக்காமையின், இப் பெயர்களை ஆராயவேண்டியநிலைமையுண்டாகிறது. கிடைத்துள்ளசங்கத் தொகை நூற்பாட்டுக்களில் இலைமறை காய்போல் காணப்படும் சொற்குறிப்புக்களும் ஓரளவு துணைசெய்கின்றன. அவ்வகையில் சேரமன்னர் சிலர் பதிற்றுப்பத்திலும் புறநானூற்றிலும் பிறதொகைநூல்களிலும் காணப்படுகின்றனர். அவருள் உதியஞ்சேரல் என்பவனும் அவன் மக்கள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் அவர்வழி வந்தோரும் காணப்படுகின்றனர். அவர்களை முறையே காண்பாம்.

---

# புள்ளினத்தின் புனிதத்தொண்டு

சாமுவேல் ஆபிரகாம் B. A; B. SC. (HONS.) L. T. விலங்கியல் துறைப்
பேராசிரியர், அமரிக்கன் கல்லூரி, மதுரை.

பறவைகள் நமக்கு ஆற்றும் சிறந்த தொண்டை நாம் நன்கு அறிவதில்லை; ஏனெனில் அவை தாம்செய்யும் உதவியைப் பறைசாற்றுவதுமில்லை; அச்சிலோ பேச்சிலோ எடுத்துரைப்பதுமில்லை. மக்கள் அவற்றைக் கற்களைவீசிக் காயப்படுத்தியும், கணைகளைஎவித்தீங்கிழைத்தும், கனத்துப்பாக்கிகொண்டு கொன்றும் விடுகின்றனர். ஆனால் பறவைகள் பயன் தூக்காது மக்களுக்குப்புரியும் உதவியை நாம் நயன்தூக்கின், அவ்வுதவி தினைத்துணையாயிருக்காது பனைத்துணையாக இருப்பதை அறிவோம். இவ்வாறு பறவைகள் நமக்குச் செய்யும் சீரிய சேவையைப்பற்றி நாம்சிறிதளவு ஆராய்ந்தறிவோம்.

பூச்சிகள் நமக்குப் பலவழிகளில் இன்னல்இழைக்கின்றன. நம் நாட்டில் சேமிக்கப்படும் தானியத்தில் 2 முதல் 5 சதவீதம் உண்டுவிடுகின்றன; கொசுக்கள்பரப்பும் மலேக்காய்ச்ச (Malarla) லால் மாத்திரம் இந்தியாவில் ஏழு லட்சம் மக்கள் மடிகின்றனர். ஈக்கள் பரப்பும் காலரா, சீதபேதி முதலிய கொடிய நோய்களால் எண்ணிறந்தவர் ஆண்டுதோறும் இறக்கின்றனர். பருத்திச் செடியைப் பல பூச்சிகள் வருத்துகின்றன; கரும்பை அறுகாலிகள் துரும்பாக்குகின்றன; சுமார் முப்பது கோடி ரூபாய் பெறும் கரும்பு நமநாட்டில் மட்டும் பூச்சிகளால் சேதமடைகின்றதென்று ஒரு பூச்சியல் வல்லுநர் உரைத்துள்ளார். நெற்பயிரும் பூச்சிகளால் புற்புதம்போல் அழிகிறது; உண்ணிகள் கால்நடைகளுக்கு உண்டாக்கும் உறுகண் எவ்வளவு! இப்பூச்சிகளின் இனப்பெருக்கவேகமோ மனத்திகிலே உண்டு பண்ணும். ஓர்கிளை ஈக்களின் சந்ததிகள் யாவும் அழியாமல் பல்கிப் பெருகுமானல் மூன்றுவாரத்திற்கு ஒரு தலைமுறையாக ஆறு தலைமுறைகளில் அவைகள் அடிக்கு இரண்டுலட்சம் ஈக்கள் வீதம் இரண்டரை லட்சம் கன அடியை அடக்கிக்கொள்ளும் என, ஹக்ஸ்லி என்னும்

உயிர்நூல்வல்லார் உரைத்துள்ளார். இப்பூச்சிகள் உண்ணும் உணவின் அளவோ நம்உள்ளத்தைத் திடுக்கிடச்செய்யும். சான்றாக ஒரு பட்டுப்பூச்சியின் வேற்றினம் உயிர் (Larva) 56 நாட்களில் தன்னுடலின் நிறையைப்போல் எண்பத்தாறாயிரம் மடங்கு எடையுள்ள உணவைத்தின்கிறதாம்! வெட்டுக்கிளித் துன்பத்தால் நம் நாட்டில் ஏற்பட்ட பட்டினிப் பஞ்சம் யாவர் அறியார்!

பல்லாற்றானும் நமக்குத் தொல்லைவிளைவிக்கும் பூச்சிகளைப் பறவைகள் எவ்வாறு ஒழிக்கின்றனவென்று ஆராய்வோம். புட்களில் வாத்து நெருப்புக்கோழி போன்றவைதவிர மற்றவை தம் பச்சிளம் பார்ப்புக்களுக்குப் பூச்சிகளையே உணவாகக் கொடுக்கின்றன. இப் பார்ப்புக்களும் ஓரேநாளில் தங்கள்உடலின் எடைக்குச் சம எடையுள்ள பூச்சிகளை உணவாக உண்ணுகின்றன. சான்றாக, சிறு பறவையாகிய சிட்டுக்குருவி களங்களிலும் கழனிகளிலும்உள்ள தானியத்தைக் கவரும் கள்வன் எனக் கருதப்படும். ஆனால் நாம் காய்தல் உவத்தல் அகற்றி அஃது ஆற்றும் அரியதொண்டை ஆய்வாம். ஒரு பெண்சிட்டு தடவைக்கு மூன்றுமுதல் ஐந்துமுட்டைகளை யிடுகிறது. முட்டையினின்றுவந்த சிறுகுஞ்சுகளுக்கு ஆணும் பெண்ணும் அதிகாலையில் ஐந்தரைமணிமுதல் அந்திப்பொழுதில் ஆறரைமணிவரை அடிக்கடி வெளியேசென்று சுமார் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பூச்சிகளையோ அவற்றின் வேற்றின உயிர்களையோ கொணர்ந்து தம் குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றன. இவ்வாறு இருபது நாட்களுக்கு உழைக்கின்றன. ஆகவே சுமார் பத்தாயிரம் பூச்சிகள் கொல்லப்படுகின்றன. ஆண்டில் இருதடவை சிட்டுகள் இனப்பெருக்கம் செய்கின்றன என்று வைத்துக் கொண்டாலும் (அவை அடுத்தடுத்து அநேகமுறை இனப்பெருக்கம் செய்கின்றன என்கிறார்கள்) அவை சுமார் இருபதாயிரம் பூச்சிகளைக் குஞ்சுகட்கு உணவாகக்கொல்கின்றன. இவ்விருபதாயிரம் பூச்சிகளும் கொல்லப்படாவிட்டால் அவையும் அவற்றின் பின்சந்ததியாரும் பயிர்களுக்குவிளைவிக்கும் இன்னல் எவ்வளவாயிருக்குமென்று உன்னிப்பாருங்கள். ஆகவே சின்னஞ்சிறுசிட்டு செய்யும் திருட்டையும் அதனால் உண்டாகும் நட்டத்தையும் சீர்தூக்கிப் பார்க்குங்கால் அதனால் ஏற்படும் நன்மைகள் வெள்ளிடைமலைபோல் தெளியத்

தெரியும். சிட்டு ஒரு வம்பனன்று; அது நமது நண்பன். ஆகையால் தான் நம்முன்னோர், அது முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யச் சுவர்களில் சிறு துவாரங்கள் அமைத்தோ அல்லது வேறுவகைகளில் அடைக்கலம்தந்தோ காத்தனர்போலும். நாகணவாய்ப்புள் துன்புறுத்தப்படும் பறவைகளில்ஒன்று. அது செய்யும் புனிதசேவையை மனிதர் கிஞ்சித்தும்எண்ணுவதில்லை தம்நெஞ்சத்தில். இப்புட்கள் பூச்சியுண்பவையே. அது அழிக்கும் வெட்டுக்கிளிகளுக்கும் விட்டிற்பூச்சிகளுக்கும் அறுதியில்லை. நம்ராஜ்யத்திலுள்ள நீலாம்பூர்க் காடுகளில் தேக்குமாங்களின் இலைகளைத்தின்னும் கம்பளிப்புழுக்களை (Hybloea, Pyrausta) மைனாக்கள் உண்பதனால் தேக்குமா உற்பத்தியைப் பெருக்க உதவுகின்றனவென்று காட்டுஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளார்கள்.

நன்செய் புன்செய் நிலங்களை விவசாயிகள் உழும்போது ஏரின் பின்னே மைனாக்களும் காகங்களும் சென்று கலப்பையினால் புரட்டப்பட்டு மேற்பரப்புக்குக் கொண்டுவரப்படும் மண்ணில்உள்ள புழுக்களையும் பூச்சிகளையும் அவற்றின் முட்டைகளையும் உண்பதை நாம் பார்த்திருக்கிறோம். இப்புழுக்களிலும் பூச்சிகளிலும் பெரும்பாலானவை பயிர்களின் வேர்களைத்துண்டித்தும் தாவரங்களுக்கு அளவிடற்கரிய அல்லல் விளைத்தும் இறுதியில் அவற்றை அழித்தும்விடுகின்றன. ஆகவே பயிர்களின் பகைவரைஒழிக்கும் பறவைகளுக்கு நாம் செய்யும் கைம்மாறு என்ன? அமெரிக்க ஐக்கியமாகாணத்தில் மக்கள் ஆதியில் குடியேறியபொழுது உப்புநீர்ப் பள்ளத்தாக்கு (Salt lake valley) ப் பகுதியில் வெட்டுக்கிளிகள் ஏராளமாய்த் தோன்றிப் பயிர்களை உண்டன. அப்போது எங்கிருந்தோ கடற்காகங்கள் (Sea gulls) எழுந்தருளி இவ்வெட்டுக்கிளிகளை உண்டு ஒழித்துக்கட்டின. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்று செந்நாப்போதார் செப்பிய செவ்வுரையைத் தம் மனத்தில் இருத்தி அவர்கள் அக் கடற்காகங்கட்கு ஒரு "ஞாபகத் தூபி" யை எழுப்பினார்கள்.

புட்கள் மிருகங்களின் உடம்பிலுள்ள உண்ணிகளை உண்டு நாட்டுவிலங்குகட்கும் கால்நடைக்கும் பரவக்கூடிய உண்ணிக்காய்ச்சல் (Red water fever) என்ற கொடிய நோயைத்தடுக்கின்றன. இவ்வியாதியை உண்டாக்கும் நுண்பிராணியை (Babesia) சிலஉண்ணிகள், பூச்சிகள் இரத்தத்தைஉறிஞ்சும்போது உட்கொண்டு பிறவிலங்குகளைக்கடித்து, செங்குருதியை உறிஞ்சுங்கால் நுண்பிராணியை அம் மிருகங்களினுடலிற் செலுத்தி அவ்வியாதியைப் பரப்புகின்றன. உண்ணிக் கொக்குகள் ஆடு மாடுகள் முதுகிலும் வயிற்றிலும் உள்ள பூச்சிகளையும் உண்ணிகளையும் உண்டுவிடுகின்றபடியால் இவ்வியாதி ஒரு மிருகத்தினின்று இன்னொரு மிருகத்திற்குப் புகுத்தப்படுவது தடுக்கப்படுகிறது. ஆகையாற்றான் உண்ணிக் கொக்குக்கு இன்றைக்கும் சூடான நாட்டில் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த வியாதி நம் நாட்டுக் கால்நடைகளையும் வருத்துகிறது என்பதை நம்மனத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். இவ்வுண்ணிக்கொக்குகள் பூச்சிகளையும் உண்கின்றன. மூன்று உண்ணிக் கொக்குகளின் வயிற்றிலுள்ள உணவை ஒருவர் ஆராய்ந்தபோது மொத்தம் நூற்று அறுபத்தாறு பூச்சிகளில் நூற்று அறுபது பூச்சிகள் பயிர்கட்கோ மற்ற உயிர்கட்கோ தீங்கிழைக்கக்கூடியபூச்சிகளாயிருப்பதைக்கண்டு வியப்படைந்தார். கரிச்சானும் (Drongo) தீங்கிழைக்கும் பூச்சிகளை உண்கிறது. இருவிதக் கருநீல நிறங்களும் கண்கவர்கவினுமுடைய கட்டுக்காடை அல்லது பனங்காடை (Roller) பூச்சியையே உண்ணும் புள்ளினமாம்.

பறவைகள் நமக்குத் தோட்டிவேலையும்செய்கின்றன. காகம், பருந்து, கழுகு முதலியவை இவ்வேலையில் ஈடுபடுகின்றன. செத்த எலி எச்சில், மற்றுமுள்ள அசுத்தப்பொருள்களை அகற்றுவதால் காகத்துக்கு ஆகாயத்தோட்டி என்ற பெயர் உண்டு என்பதை நாம் சிறுவகுப்புக்களில் படித்துள்ளோம். மாடு, கழுதை, நாய் முதலியவை செத்துவிட்டால் ஒருவரும் கழுகு முதலியவற்றை வருந்தி விருந்திற்கழைக்க வேண்டியதில்லை. அழையா விருந்தினராய் எழுந்தருளிச் செத்தபிணங்களின் மாமிசத்தையும் நிணத்தையும் வயிறு

புடைக்கஉண்டு பின்னர் அவை ஓடிவிடுகின்றன. உணவுப் பஞ்சத்தாலோ மாடுகளுக்கு ஏற்படும் தொத்துரோயினாலோ சில சமயங்களில் அநேகமாடுகள் ஒரேசமயத்தில் இறக்கின்றன. அவற்றைச் சரியாக மக்கள் புதைப்பதில்லை. நரி அவற்றின்மேலுள்ளமண்ணை எளிதாக நீக்கிவிட்டுத் தமக்குவேண்டிய பாகத்தைத் தின்றுவிட்டு நீங்கிவிடுகின்றது. அப்போதுதான் மேற்கூறியதோட்டிகளின்வேலைபாராட்டுக்குரிய முறையில் செவ்வனே நடைபெறுகின்றது. கடற்கரையோரங்களில் சிலசமயங்களில் பல செத்த மீனினங்களும் மற்றப் பிராணிகளும் அலைகளால் கொண்டுவரப்பட்டு அழுகிச் சகிக்க வொண்ணு நாற்றத்தை உண்டுபண்ணுகின்றன. அவ்வமயம் கடற்பறவைகள், முக்கியமாகக் கடற்காகங்கள் அவற்றையுண்டு கடற்கரையிலுள்ள கறையை நீக்குவதில் காட்டும் அக்கறை பாராட்டற்பாலது.

காட்டெலி, சுண்டெலி, வீட்டெலி, அணில், முயல் முதலியவை வயலிலும் வீட்டிலும் நம் உணவுப் பொருளுக்குப் பெருங்கேடு உண்டாக்குகின்றன. எலி, ப்ளேக் முதலிய கொள்ளைநோயையும் பரப்புகிறது. சிந்துமாகாணத்தில் நெற்பயிராகும் பாகத்தில் பத்துமுதல் ஐம்பதுசதவீதப் பயிருக்கு நட்டத்தை அங்குள்ள எலி (Mole rat) ஏற்படுத்துகின்றது. எல்லாவகை எலிகளும் இனப்பெருக்கத்தை அதிவேகமாக நடாத்துகின்றன. எடுத்துக்காட்டாக ஓர் எலி சூலுக்கு எட்டுக்குட்டிகள் வீதம் ஆண்டில் ஆறுசூல்கள் ஈனும். இக்குட்டிகள் மூன்றரை மாத வயதானவுடன் தாங்களும் குட்டிபோடுகின்றன. ஒருசோடி எலிகளும் அவற்றின் சந்ததியும் இறப்பின்றி இருந்தால் ஓர் ஆண்டில் எண்ணூறு எலிகளாகிவிடுகின்றன. இதேவிதத்தில் ஒரு சோடியின் சந்ததி ஐந்தாண்டில் 940, 369, 968, 152 எலிகளாகப் பெருகக்கூடும். இயற்கையில் இவ்விதம் நிகழாவிட்டாலும் எலிகளுக்கு இனப்பெருக்கச்சக்தியும் வேகமும் அதிகம்என்பது இதனால்புலனாகின்றது. ஆகவே ஒவ்வொரு எலியினையும் பறவைகள் உண்ணும்பொழுது எண்ணூறுஎலிகள் பெருகுவதைத் தடுக்கின்றன. நம்நாட்டு ஆந்தைகள், புலாலுண்புட்கள், எலி, சுண்டெலி ஆகியவைகளை உண்கின்றன.

இத்துறையில் ஆந்தையின் அரிய அலுவலை ஆராய்வோம். ஆந்தை ஓர் இராப்புள். அது தன் சீரியதொண்டை நள்ளிரவில் நடத்துறபடியால், நாம் அதைக் கவனிப்பதில்லை. உண்மையான பெரியார்கள் தாம் செய்யும் சேவையைக் கண்டு மற்றவர்கள் புகழ வேண்டுமென்று விரும்பமாட்டார்களல்லவா? ஆந்தைகள் இரவில் நடமாடும் எலி, சுண்டெலிகளைப் பிடித்துத் தின்னுகின்றன. நடு வயதுள்ள ஆந்தை ஒன்று சுமார் எட்டு அல்லது ஒன்பது சுண்டெலிகளைத் தின்றுவிட்டு மூன்றுமணிநேரத்துக்குப்பின் மறுபடியும் பசியாயிருந்ததாக, ஓர்ஆராய்ச்சியாளர்எழுதுகிறார். இத்துறையில் பருந்து, அன்றில் முதலிய பறவைகளும் பெரிதும் உழைக்கின்றன.

உருவில் சிறியதும் திருவில் (அழகு) பெரியதும் பகட்டான பன்னிறங்களையுமுடைய தேன்சிட்டுக்களில் மூன்று நான்கு வகைகள் நம் நாட்டில் உண்டு. இவை மாற்று மகரந்தச் சேர்க்கையை உண்டுபண்ணும் ஆற்றல்உள்ளன. அதில் ஒருவகைத் தேன்சிட்டு அன்றலர்ந்த முருங்கைமலர்களுக்குச் சென்று அவற்றிலுள்ள தேனைத் தன்நீண்ட நாக்கால்உறிஞ்சி அம்மலர்களிலுள்ள மகரந்தப் பொடியையும் அயில்கின்றது. சிலமகரந்தப் பொடிகள் அலகிலும் இறக்கைளிலும் ஒட்டிக் கொள்கின்றன. பின்னர் அடுத்தபூவிற்கு அகலும்போது அப்புள்ளின் அலகிலும் இறகிலும் இருக்கும் மகரந்தப் பொடி அங்குள்ள பூவில் விழ மாற்று மகரந்தச் சேர்க்கை நிகழ்கிறது. இவ்வாறு இவை மாற்றுமகரந்தச்சேர்க்கை பலதாவரங்களில் நடைபெறச்செய்கின்றன. ஆனால், இறைவன் தன் படைப்பில் ஒவ்வொரு இனத்திடத்தும் நன்மையும் தீமையும் விரவித்தானே வைத்துள்ளான்! தேன்சிட்டு நமக்கு உபயோகமான தாவரங்களில் மகரந்தச்சேர்க்கை உண்டுபண்ணுவது போல நம் மாமரங்களுக்குத் தீமைசெய்யும் புல்லுருவிகளை (Loranthus and Viscum) யும் மகரந்தச் சேர்க்கை உண்டுபண்ணும் குற்றவாளிகளா யுள்ளன எனினும்,

"கொன்றன்ன இன்னாசெயினும் அவர் செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும்" என்றும்
"நன்றல்ல தன்றே மறப்பது நன்று" என்றும

நவின்ற, வான்புகழ்கொண்ட பெருநாவலர் வாக்குகட் கிணங்க, நாம் தேன்சிட்டுச் செய்யும் சீரியசேவையை மாத்திரம் மனத்திற் கொள்ள வேண்டும். நம்நாட்டில் தீக்குச்சிகள்செய்வதற்கு மென்மைத் தன்மையும் எளிதில் ஏராளமாகக் கிடைக்கக்கூடியதுமான மரங்களில் மிகச் சிறந்தது இலவமரம். இதன்பூக்கள் செந்நிறமும் நன்னறவமும் கூடி அநேக புட்களுக்கு நல்வரவும் நல்விருந்தும் நல்குகின்றன. ஆகையாலன்றோ "செல்விருந்தோம்பி வருவிருந்து" பார்த்திருப்பான் போன்று அறபதக்கும் அதிகமான வெவ்வேறுவகைப்புட்களை விருந்தோம்புகின்றது இம்மரம். இப்பறவைகளும் கைம்மாறு செய்வான் போல் இம்மரத்தின் பூக்களில் மகரந்தச்சேர்க்கை உண்டுபண்ணுகின்றன. இம்மாற்று மகரந்தச்சேர்க்கையால் திடமானவிதைகள்உண்டாகி அவற்றிலிருந்து மரங்களுண்டாகி நம்தீக்குச்சித்தொழில் நடைபெற நல்வாய்ப்பு ஏற்படுகின்றது. இத்தொண்டில் பெருமளவுபங்குகொள்வது (Rosy Pastor) என்னும் பறவை. இப்பறவை வெட்டுக்கிளிகளையும் உண்டு மட்டற்ற சேவைசெய்கின்றது. காப்பிச் செடிகளுக்கு நிழல்கொடுக்க, காப்பித்தோட்டங்களில் வளர்க்கப்படும் மரங்களில் முள்முருங்கை முதன்மைவாய்ந்தது. இதன்பூக்களிலும் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதற்கு மைனு, காகம், புல்புல் போன்ற அநேகப் புட்கள் உதவுகின்றன. குயிலும் இவ்வேலையி லீடுபடுவதாகச் சங்கநூல்களின் வாயிலாக அறிகிறோம்:

பாசரும் பீன்ற செம்மூகை முருக்கின்
போதவி ழலரி கோதித் தாதருந்து
அந்தளிர் மாஅத்து அலங்கன் மீமிசைச்
செங்கண் கருங்குயில் நயவரக் கூஉம்
இன்னிள வேனில்.—அகம் 229.

(தொடரும்)

## 17-9-55-ல் மதுரைத் தமிழ்ச்சங்கக் கட்டிடத்திலும் 18-9-55-ல் உப-தலைவர் வீட்டிலும் நடந்த போதஅங்கத்தினர் மகாசபைக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்.

1 மகா-ா-ா-ஸ்ரீ SIR. P. T. இராசன் அவர்கள்-(உப-அக்கிராசனாதிபதி) மதுரை.
2 „ P. முகம்மது சுல்தான் அவர்கள், மதுரை.
3 „ அ. சிதம்பரம் அவர்கள், மதுரை.
4 „ ரா. பாலுசாமி அவர்கள், மதுரை.
5 „ மீ. கந்தசாமிப் புலவர் அவர்கள், மதுரை.
6 „ ச. சாம்பசிவன் அவர்கள், மதுரை.
7 „ P. ராமசாமி ராஜு அவர்கள், இராமநாதபுரம்.
8 „ P. ரெங்கசாமி நாயுடு அவர்கள், B.A.,B.L., அட்வகேட், மதுரை.
9 „ S. S. பாரதி அவர்கள், பசுமலை.
10 „ கி. பழனியப்பன் அவர்கள், மதுரை.
11 „ V. பாலகுருசாமி அவகர்ள், மதுரை.
12 „ V. அழகப்பன், மதுரை.
13 „ V. ஷண்முகசுந்தரம் அவர்கள், M.A., B.L., மதுரை. (காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

---

### தீர்மானங்கள்

1. விழாக்கொண்டாட்டம்--மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழாவைக் கூடியசீக்கிரம் ஒரு வாரம் கொண்டாடுவதாகத் தீர்மானிக்கப்பெற்றது.

2. ஷெ விழாவைக் கொண்டாட சுமார் ஒரு லெட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்களிடம் நன்கொடையைச் சங்கம் வேண்டுகின்றது.

3- உப தலைவர் திரு. P. T. இராசன் அவர்கள் தமிழ்ச்சங்கப் பொன்விழாக்குழுவிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

4. பொன்விழாக்குழுஉறுப்பினர்களைத் தலைவர் திரு. P. T. இராசன் அவர்களே நியமித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளலாயிற்று.

5. மதுரைச் சம்பந்தமூர்த்தி தெரு 28 நெ. வீட்டிலிருக்கும் ஸ்ரீ N. நடேசன் அவர்கள் அங்கத்தினராக அங்கீகரிக்கப்பெற்றார்.

6. சங்கப் புனரமைப்பின் நோக்கங்கள் விதிகள் திருத்தத்துடன் அங்கீகரிக்கலாயின.

18—9—55
மதுரை

(Sd.) P. T. இராசன்.
துணைத்தலைவர்.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | களுதல் (5) இனியதுநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச் சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | திணைத்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4-0-0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

---

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.